நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய, மாத இதழ்)



கைகளில் சூலம் பாசம் ஏந்திக் காணற் கரியவளாய்க்
காரைக் குடியில் கொப்புடை நாயகி காட்சி கொடுக்கின்றாள்
பொய்யடை யாத நெஞ்சுடை யாரைப் பொலிவாய் நாடுகிறாள்
போற்றி அவள் பதம் போற்றி அவள் அருள் போற்றிடு வாய்மனமே

மே 1990

With best compliments from :

M/s. PANS Auto Products

13-B, North Veli Street

MADURAI - 625 001



MALAX



Radiator Hoses

M/s. Hema Agencies

Madurai & Madras

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 4

பிரமோதூத சித்திரை

மே 1990

வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விறைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே.

—திருமூலர் திருமந்திரம்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி.
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00



கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை



பதிவாளர், முனைவர் பெரி. கற்பககணபதி

வயிரவன் கோவிலைச் சேர்ந்தவர்களுக்கு 'வயிரவன்' எனப் பெயர் சூட்டுவதைப்போல, பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த இவருக்கு, இவரது பெற்றோர் 'கற்பக கணபதி' என்கிற அழகிய பெயரைச் சூட்டியுள்ளனர்.

திரு. கற்பக கணபதி நற்சாந்துபட்டி திரு. ஆ. பெரி. பெரியகருப்பன் செட்டியார் - திருமதி வள்ளியம்மை ஆச்சியின் புதல்வராவார்.

திரு. கற்பக கணபதி புதுக்கோட்டை சி. எஸ். எம். உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியையும் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் B. Sc. (Zoology) யையும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் M. Sc. (Zoology)யையும் கற்றுத் தேர்ந்தவர். M. Sc. யில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்ற இவர், குன்னூர் Pasteur Institute ல் ஓராண்டு பயிற்சி பெற்ற பின் 1963 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். பகுதி நேரத்தில் Fisheries பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். தகுதி அடிப்படையில் இணைப் பேராசிரியராகவும் பின்னர் பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்று விலங்கியல் துறையின் தலைவரானார்.

இவருடைய வழிகாட்டுதலின் பேரில் மூன்று மாணவர்கள் முனைவர் பட்டமும் 18 மாணவர்கள் M. phil பட்டமும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பல ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பயிற்சியும் அளித்து வருகிறார். மீன் வளர்ப்புத் திட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். விடுதிக் காப்பாளராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

51 வயதுடைய முனைவர் திரு. கற்பக கணபதி 26 ஆண்டுகள் தொடர்ந்து சிறப்புறச் செயலாற்றியதன் விளைவாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளராக (Registrar) பிப்ரவரி '90ல் நியமிக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறார். அவருக்கு நமது மகிழ்ச்சியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்



கிறோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியருள் ஒருவர் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளது இதுவே முதன் முறையாகும்.

இவருடைய துணைவியார் திருமதி மீனாட்சி M.Sc. M.Math (Canada) பட்டம் பெற்றவர். ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கணிதத் துறையில் (D. D. E.) பேராசிரியையாகப் பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு இரண்டு பெண்கள் உள்ளனர்.

திருமணம்

குருவிக்கொண்டான்பட்டி கவிஞர் வ. பழ. ராம. பெரிய கருப்பன் என்கிற கருப்பையா செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி தேனம்மைக்கும் நெற்குப்பை முரு. பழ. மு. முரு. சிங்காரம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முருகப்பன் என்கிற அண்ணாமலைக்கும் 1-2-90 அன்று குருவிக்கொண்டான்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி கவிமகள் இராம. நடராசன் செட்டியார் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. அப்போது 'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் திரு. எம். சி.என். மாணிக்கம், தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன், கொப்புடையவள் மூவிஸ் திரு. வி. மீனாட்சி சுந்தரம் ராங்கியம் ஊராட்சித் தலைவர் திரு. ஆவுடையப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஸ்ரீ கொப்புடையம்மன் பதிகம் (வருகை)

(வெண்பா மாலை)

கண்கண்ட தெய்வமே! காரை இறைவியே?
மண்கொண்ட துன்பனைத்தும் மாற்றிடுக! பண்கொண்ட
செந்தமிழைச் சூடிச் சிறந்தநலம் ஊட்டிடுக!
வந்தருள்க தேரில் மகிழ்ந்து.

சிங்கத்(து) அரியணையில் செம்மாந்து வீற்றருளும்
தங்கத் தலைவியே! தண்கருணை — பொங்கிவர
எங்கும் சுகம்விளைய எண்ணித் திருத்தேரில்
மங்கலமாய் வாவா மகிழ்ந்து.

அன்புத் துணையாகி ஆதரிக்கும் கொப்புடையாய்!
செம்பொருளே! எங்கள் திருமனையில் — இன்பமழை
நின்று பொழிந்திருக்க நீளருளால் தேரேறி
நன்றுதவ வாவா நயந்து.

வெள்ளிக் கிழமை விரதம் கடைப்பிடிக்கும்
பிள்ளை எனைவளர்த்துப் பேரரசாய்த் - துள்ளியுடன்
ஆக்கி அருளும்சீர்க் கொப்புடையாய்! இங்குடனே
வாக்குத்தேர் ஊர்வாய் மகிழ்ந்து.

செல்லும் வழித்தடத்தில் சீரே விளைந்திருக்கப்
புல்லர் குறுபபெல்லாம் போயொழிய — நல்லவரைத்
தாங்கும் கருணையினுல் தங்கத் திருத்தேரில்
ஓங்கி வருவாய் உவந்து.

வந்தவரைத் தாங்கி வளம்சொரியும் கற்பகமே!
செந்தமிழ்ப்பால் உண்டு செழித்தவளே! — சொந்தமுடன்
கொப்பணியும் தாயே! குறையகற்றத் தேரேறி
எப்பொழுதும் வாராய் இசைந்து.

எங்கள் மனைவாழ்வில் ஏற்றம் மிளிர்ந்துவரப்
பொங்கும் அறத்தேரில் பூமிசையில் — மங்கலத்நுக்
கொப்புடைய நாயகிநீ கோடி வளம்பொழிந்து
எப்பொழுதும் வாராய் இசைந்து.

தேரோட்டும் கண்ணன் திருத்தங்கை ஆனவளே!
ஏரோட்டும் சாலில் இனியபயிர் — சீராட்டும்
எங்கள் பசிதவிர்க்க ஏராள மாய்க்குவித்துத்
தங்கத்தேர் ஊர்ந்தருள்வாய் சார்ந்து.

நஞ்சை அமுதாக்க நாயகனர் தன்கழுத்தைக்
கொஞ்சிப் பிடித்தருளும் கொப்புடையாய்! — தஞ்சமென
வந்திருக்கும் எம்மை வளமாக்கப் பொன்தேரில்
சொந்தமென வாராய்நீ சூழ்ந்து.

வெற்றித் திருவேலை வேலனுக்குத் தந்தவளே!
பற்றை வரமாக்கிப் பார்த்தருள்வாய்! — சுற்றமென
எண்ணத் திருத்தேரில் என்றென்றும் கொப்புடையாய்!
வண்ணமுடன் வாராய் மலர்ந்து.

— கவிஞர் இராகவன்முத்து

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்



—52—

பாரீஸில் மியூசியத்திற்குச் சென்றோம். உலகப் புகழ் பெற்ற மோனாலிசா ஓவியத்தைப் பார்த்தோம். பாரீஸ் இரவு பகலாகக் காட்சியளிக்கிறது. பாரீஸில் எல்லோரும் சென்ட் போட்டுக் கொள்கிறார்கள். சிலர் சென்டிலேயே குளிக்கிறார்களோ என்று சொல்லும் அளவுக்கு அதைப் பயன்படுத்துகிறார்கள். சிறு வயதில் சிங்கப்பூரில் வாழ்ந்தபோது பாரீஸ் சென்ட்தான் அதிகம் வாங்குவோம். எங்கு சம்பாதிக்கிறார்களோ தெரியாது. ஆனால் பாரீஸில்தான் செலவு செய்கிறார்கள்.

பிரான்சில் மிகப் பெரிய கலையரங்கமான ஓபரா ஹவுஸ் கட்டிடத்தைப் பார்க்கப் புறப்பட்டோம். அது அரண்மனை போல் காட்சியளிக்கிறது. வெண்கலச் சிலைகள் நிறைய இருக்கின்றன. பாரீஸ் முழுவதுவே கல், வெண்கலம் முதலிய சிலைகளைக் காணலாம். அந்தக் கட்டிடத்தை நாங்கள் பார்க்கச் சென்றபோது நிறைய பிரஞ்சுக்காரர்களும், சில



பாரீஸ் நகரத்தில் திரு. ஏஎல். பெரியகருப்பன் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் டாக்டர் எம். ஏ. சி. எஸ். ராஜேந்திரன்.

இந்தியர்களும் பிரஞ்சுக் கொடிகளையும், இந்தியக் கொடிகளையும் கைகளில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனர்.

அவர்கள் சுமார் ஆயிரம் பேர் இருக்கலாம். அங்கு நின்றவர்களை விசாரித்தபோது புதிதாக இந்தியாவில் பிரதமராகப் பதவியேற்ற திரு. ராஜீவ்காந்தி பாரீஸிற்கு வந்திருப்பதாகவும், சிறிது நேரத்தில் அந்த அரங்கத்திற்கு வரப்போகிறார் என்றும் அவரை வரவேற்க, பார்க்கக் கூடியிருப்பதாகச் சொன்னார்கள். ''வெளிநாட்டுத் தலைவர்களைக் காண்பதற்கு இப்போது எல்லாம் கூட்டமாக யாரும் வருவதில்லை டி. வி.யிலே பார்த்து விடுவோம். மிகப் பெரிய தேசமான இந்தியாவில் ஜனநாயக முறையில் தேர்ந்து எடுக்கப்பட்ட இளம் பிரதமரைப் பார்ப்பதற்காகத் தான் நேரில் கூடியிருக்கிறோம்'' என்று பிரஞ்சுக்காரர்கள் சொன்னதும், இந்தியர்களாகிய எங்களுக்கு அது மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. அயல் நாட்டு மண்ணில், அயல் நாட்டுக்காரர்கள் நமது தேசியக்கொடியை வைத்திருந்ததைப் பார்த்துப் பரவசமடைந்தோம். இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியின் பாதுகாப்பிற்காக எங்கு பார்த்தாலும் போலீஸ்காரர்களையும், சி. ஐ. டி களையும் நிறுத்தியிருந்தார்கள். கட்டிடத்தின் மேலே எந்திரத் துப்பாக்கியுடன் டெலஸ்கோப் மூலம் ஒரு காவலர் பார்த்துக் கொண்டேயிருந்தார். நாங்களும் ராஜீவைப் பார்ப்பதற்கு கூட்டத்தோடு போய் நின்று கொண்டோம். சிறிது நேரத்தில் சோனியா காந்தியுடன் அவர் காரில் வந்து இறங்கி கட்டிடத்தின் படிகளிலே ஏறினார். கூடியிருந்த மக்கள் கைதட்டினார்களே தவிர ஒருவர் கூட நமது நாட்டில் நடப்பது போல ''வாழ்க'' என்று கோஷம் போடவில்லை. கட்டிடத்தின் படிகளிலே ஏறி என் அருகில் வந்தபோது உணர்ச்சிவசப்பட்ட நான் கூட்டத்திலிருந்து விலகி என்னை அறியாமல் அவரோடு கை குலுக்கிவிட்டேன். இரு முறை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் அவரை வரவேற்ற நான் என்னை யாரென்று ஒரு நிமிடத்தில் அறிமுகம் செய்து கொண்டேன். அவரும் கை குலுக்கி விட்டுச் சிரித்தபடியே சென்று விட்டார். அதற்கு பிறகுதான் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன் என்பதை உணர்ந்தேன். காரணம், பாதுகாப்புக் கருதி பாதுகாவலர்கள் எங்களை என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம். நான் கை குலுக்கியதும் அவர் சிரித்ததைப் பார்த்து நான் அவருக்கு அறிமுகமான இந்தியர் என்பதை உணர்ந்து, பேசாமல் இருந்து விட்டனர்.

(வளரும்)

நம் பழக்கம்

நகரத்தார் பெருமக்களில் வயது முதிர்ந்தவர்கள் சிலர் கையாளும் பழக்கங்கள் மிகவும் பொருள் செறிந்தவை மட்டுமல்ல; பயன் தருபவையும் சிறு சங்கடங்களைத் தவிர்ப்பவையும் ஆகும். நம் செட்டியார்களில் பல பெரியவர்கள் கைக் கடிகாரத்தை மணிக்கட்டின் உள்பக்கமாக வைத்துக் கட்டியிருப்பர். நடக்கும் போதோ வண்டிகளில் இருந்து பயணம் செய்யும் போதோ உராய்வு ஏற்பட்டுச் சிறு ஊறு நேர்வதையும் இம் முறையினால் அவர்கள் தவிர்ப்பர்.

— இராகவன்முத்து

உங்கள் குரல்

நம்மவர்களில் பெரியவர்கள், அறிஞர்கள் தகுதி உடையவர்களைப் பற்றி எழுதுவதில் ''நகரத்தார் குரல்'' முன்னணியில் இருக்கிறது. அமரராகிவிட்ட பெரியவர்களை நினைவு கூர்ந்து செய்திகள், கட்டுரைகள் வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டுகிறது. மார்ச்' 90 இதழில் குழந்தைக் கவிஞர் பற்றியும் ஏப்ரல்' 90 இதழில் வ. சுப. மாணிக்கனார் பற்றியும் கட்டுரைகள், செய்திகள்வெளியிட்டதைப் பாராட்டுகிறேன்

ஆர்எம். கண்ணப்பன்
சென்னை.

இம்மாதம் (ஏப்ரல்) குரல் நான்கு நாட்கள் தாமதமாகக் கிடைத்தாலும் சுவைக்கும் செய்திகளுக்குக் குறைவில்லை. முனைவர் தமிழண்ணல் முனைவர் சுப. அண்ணாமலையின் கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டுகின்றன. சொ. சொ. மீ. சுந்தரத்தின் பழநிப் பாதயாத்திரைக் கட்டுரை தேனாக இனித்தது.

வி. வினைதீர்த்தான்
சேலம்

பலதரப்பட்ட செய்திகளையும் கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் நம் குரலைப் படிக்காமல் இருக்க முடியவில்லை. ஒன்று, மாதம் இரு முறையாக்குங்கள். இல்லையேல் பக்கத்தைக் கூட்டுங்கள்.

எஸ். சுப்பிரமணியன்
பாகனேரி

'எச்சில் இலை நாகரிகம்' என்ற தலைப்பில் முனைவர் தமிழண்ணல் அவர்கள் ஏப்ரல்' 90 இதழில் எழுதியுள்ள கட்டுரை சிந்தனையைத் தூண்டுவதோடு சிக்கனத்தையும் வலியுறுத்துகிறது. 'விசேடம் நடத்தும் போது ஆனந்தமாகத்தான் இருக்கும். அது முடிந்தபிறகு தான் சோர்வும் தலை சுற்றுவதும் கடன் சமாளிப்பும் கூடுதலாக இருக்கும்' என்ற வரிகள் முற்றிலும் உண்மையானவை.

ஆர். சிதம்பரம்
சென்னை

நம்மவர்களில் பலர் இலக்கியம், மருத்துவம், பொறியியல், சட்டம், தொழில் ஆகியவற்றில் புகழ் பெற்று விளங்குவது நாடறிந்த உண்மை. ஆனால் கண்டவராயன்பட்டியைச் சேர்ந்த திரு. எஸ்பி. முருகப்பன் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது; பெருமைக்குரியது. இதை வெளியிட்ட குரலுக்குப் பாராட்டுக்கள்.

'ப்ளோரா' பழனிக்குமார்
கண்டவராயன்பட்டி

திருமணம்

காரையார்மங்கலம் திரு. வி. சொ. இராம. கண்ணப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி சாந்தி என்ற தெய்வானைக்கும் பாகனேரி சுப ஆவி. சுப. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் ஆவிச்சி என்ற தியாகராஜன் M. Com. க்கும் காரையார்மங்கலத்தில் 15-3-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

'வேலை வேலை என்று நாளைப் போக்காது தொழில் செய்ய முன் வாருங்கள்'

மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதியுடன் ஒரு பேட்டி

மதுரை வங்கியில் எழுத்தராகச் சேர்ந்து, குறைந்த வயதிலேயே அதே வங்கியின் தலைவரான திரு சுப. சபாபதி அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவைக் காண, சென்னையில் உள்ள சோழா ஓட்டல் சென்றேன். அப்போது சபாபதி அவர்களைச் சந்தித்து பேட்டி காணத் தேதி கேட்டேன். ''அடுத்த வாரம் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்'' என்றார்கள். அதன்படி பலமுறை தொடர்பு கொண்டபோதும் அவர்கள் வெளியூர்களுக்குச் சென்றிருந்ததால் பேட்டி காண வாய்ப்புக் கிடைக்கவில்லை. கடைசியாக 14-3-90 அன்று அந்த நல்வாய்ப்புக் கிடைத்தது.

அன்று புதன்கிழமை.. 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்பார்கள். காலை நேரம் திரு. சுப. சபாபதி அவர்களைச் சந்திக்க பலர், மலர்மாலைகளுடன் காத்திருந்தார்கள். பின்புதான் தெரிந்தது அன்று அவர்களின் 55 ஆவது பிறந்த நாள் என்று! நானும் அவர்களைச் சந்தித்து முதலில் ''நகரத்தார் குரல்'' சார்பாக அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டேன்.

பணியில் ஆர்வம், திறமையோடு கூடிய கடின உழைப்பு, நேர்மை, சக அலுவலர்களை அரவணைத்துச் செல்லும் தன்மை போன்றவை ஒரு மனிதனுக்கு வாழ்வில் உயர்வைத் தரும் என்பதற்கு மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்கள் ஓர் எடுத்துக்காட்டு.

நாட்டரசன்கோட்டை ச. ராம. உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியையும் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் வணிகக் கல்வியையும் முடித்த திரு. சுப சபாபதி அவர்கள் 1956ஆம் ஆண்டில் மதுரை வங்கியில் எழுத்தராகச் சேர்ந்தார்கள். இவர்கள் படிப்படியாக கணக்காளராகி, மேலாளராகி, குரூப் மேலாளராகி துணை உயர் அதிகாரியாகி, உயர் அதிகாரியாகி 1981ல் துணைப் பொது மேலாளராகி, 1984ல் பொது மேலாளராகி, 1986ல் தலைமைப் பொது மேலாளராகி இப்போது (18-12-89 முதல்) தலைவராகியிருக்கிறார்கள்.

இந்த நிலைக்குத் தாங்கள் உயர்ந்ததற்குக் காரணம் ஏதாவது உண்டா?

நான் நிதானமாக இதே வங்கியிலேயே பணியாற்றினேன். என் கொள்கையிலிருந்து நான் மாற நினைத்ததில்லை. வங்கிக்குப் பாதகமான எந்தச் செயலையும் செய்ததில்லை. Loyality is more important. அடுத்து.. கடின

உழைப்பு. எந்தக் காரணத்திற்காகவும் நான் வேறு நிறுவனம் போக நினைத்ததில்லை.

உண்மை தான். Rolling stone gathers no moss என்பார்கள். தாங்கள் எங்கெங்கு பணியாற்றினீர்கள்?

தமிழ்நாட்டில் பல இடங்களில், பின்.. கேரள மாநிலம் கொச்சின் கிளையில் மானேஜராகவும், மகாராஷ்டிராவில் குரூப் மானேஜராகவும் மேற்கு வங்காளத்தில் கல்கத்தாவில் ஏ. ஜி. எம்.மாகவும் பணியாற்றினேன்.

தலைவர் பதவி கிடைத்தபோது தாங்கள் என்ன நினைத்தீர்கள்?

''I have achieved something'' என்று தோன்றியது.

சோழா ஓட்டல் பாராட்டு விழாவில் பலரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசினாலும், வயதாலும் அனுபவத்தாலும் குறைந்த திரு. லேனா தமிழ்வாணன் மிகச் சரியான 'பாயிண்டை'ப் பிடித்தார். 'எத்தனை வீடுகளுக்கு விளக்கேற்றி வைக்கின்றீர்கள் என்பது தான் முக்கியம்' என்றார். அது பற்றி..?

நிச்சயமாக பல குடும்பங்களில் விளக்கேற்றி வைக்க ஆசைதான். அதற்கு நிறைய வங்கிக் கிளைகளைத் திறக்க வேண்டும். வேலை வாய்ப்பு அதிகரிக்க வேண்டும். நம் மாநிலத்தில் கிளைகள் திறக்க வாய்ப்புகள் குறைவு. எனவே வெளிமாநிலங்களில் தான் திறக்க வேண்டும். தற்போது தேர்வு வைத்துதான் ஆட்களை எடுக்கிறோம். கம்ப்யூட்டர் மூலம் திருத்துகிறோம். 80% மார்க்குகள். தேர்வில் பெற வேண்டும். 20% தான் 'இண்டர்வியூ'வில் - அதனால் சிபாரிசில் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது.

திரு. எல். கிருஷ்ணன் அவர்கள் வாய்ப்பளித்தது போல, நீங்கள் பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பீர்களா?

திரு. எல். கிருஷ்ணன் அவர்கள் பல பெண்களுக்கு வாய்ப்பளித்தது உண்மையே. அன்று அவர்கள் மனைவி இறந்த போது மிகச் சிலரே வந்திருந்தார்கள், திருவெற்றியூருக்கு.. நம்மினம்.. நம் பெண்கள்.. என்கின்றீர்களே.. எவ்வளவு நன்றியுணர்வு பார்த்தீர்களா?

கிருஷ்ணன் அவர்களால் வங்கியில் சேர்ந்து, இன்று நல்ல நிலையில் இருக்கும் பெண்கள் அங்கு வரவில்லை என்பதற்காக அவர்கள் நன்றி மறந்து விட்டார்கள் என்று பொருள் கொள்ள முடியாது. அவர்களுக்குப்பின் வந்தவர்களுக்கு (என் போன்றவர்களுக்கு) வாய்ப்புக் கிடைக்காத போது கிருஷ்ணன் அவர்கள் பதவியில் இருந்திருந்தால் வங்கி வேலை கிடைத்திருக்குமே என்று எண்ணியவர்களும் உண்டு பல பெண்கள் மாமியார் தொகை கொடுக்க முடியாததால் திருமணம் ஆகாமல் இருக்கின்றார்களே.. அதற்கு உதவியாக..

தற்பொழுது பெண்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கின்றோம்!

டெலிபோன், டெலக்ஸ், ஷார்ட்ஹாண்ட், டைப்ரைட்டிங் ஆகியவை கற்றிருந்தால், செகரட்டரி போஸ்ட் தருவது சரியே.. ஆனால் அதன் எண்ணிக்கை

மிகக் குறைவு ஆயிற்றே..

இல்லையில்லை. இன்று ஆண், பெண் அனைவருக்குமே சம வாய்ப்புண்டு. ஆனால் தேர்வில் வெற்றி பெற வேண்டும்.

வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வேறு உண்டே..

ஆமாம் S.C., S.T., பின்தங்கியோர் இனத்திற்கென்று 8 சதவீதம் உண்டு.

80 சதவீதம் மார்க்குகள் பெற்று தேர்வில் வெற்றி பெறுவது சிரமமானதாயிற்றே..?

சிரமம்தான். நம் இனத்து இளைஞர்கள் வேலை வேலை என்று நாளைப் போக்காது பலதரப்பட்ட தொழில்களைச் செய்ய முன்வர வேண்டும். அப்படி முன்வந்தால் நாங்கள் கடன் கொடுக்கத் தயாராக உள்ளோம்.

அப்படியா? மிக்க சந்தோஷம்? எந்த அடிப்படையில்?

எஞ்சினியரிங், பாலிடெக்னிக் பட்டதாரியாய் இருந்தால் கல்வி அடிப்படையில்.. அனுபவம், திறமை, உழைப்பு அடிப்படையிலும் கடனுதவி அளிப்போம்.

சொத்துக்களை அடமானமாகக் கேட்பீர்களே..

(சிரித்துக் கொண்டே) இல்லை.. தேவை அடிப்படையில் இலட்சக்கணக்கில் கூடக் கொடுக்கின்றோம்.

தொழில் செய்வதில் ஏற்ற-இறக்கம் உண்டே! நஷ்டங்கள் வந்தால் தாங்க முடியாதே..



யாரோ ஒருவர் இருவருக்கு வந்திருக்கலாம். அதை உதாரணம் காட்டக்கூடாது.

உண்மை தான்.. Exception can not be Examples.

எங்கள் வங்கியில் பணிபுரிந்த திரு. சாத்தப்பன், தன்னுடைய வேலையை ராஜினாமாச் செய்து விட்டு தொழில் தொடங்கி இன்று நல்ல நிலையில் இருக்கின்றார்கள். திரு. ஸ்வஸ்திக் நாராயணனும் அப்படியே... வேலைக்குச் சென்றால் 4 ஆயிரம் ரூபாய் முதல் 8 ஆயிரம் ரூபாய் வரை வாங்கி ஓய்வு பெறுவார்கள். ஆனால் தொழில் செய்பவர்களோ பல இலட்சங்களுக்கு அதிபதி. மேலும் They will stand on their own legs. யாரையும் சார்ந்து நிற்க வேண்டிய அவசியமில்லை. மார்வாடிகளைப் பாருங்கள். மிகக் குறைந்த வயதிலேயே 16, 17 வயதுகளில் கூட தொழில்களைத் தொடங்குகின்றார்கள். நம்மிடம் கடன் வாங்கி ஏற்றுமதி இறககுமதித் தொழில் தொடங்கி இலட்சாதிபதியாக இருக்கின்றார்கள்.

வங்கியில் தெரிந்தவர்கள் இருந்தால் தான் கடன் பெற முடியும் என்ற கருத்துப் பரவலாக நிலவுகிறதே அது பற்றி?

இல்லையில்லை உழைக்க வேண்டும்; முன்னுக்கு வர வேண்டும்; திரும்பக் கட்ட வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்களுக்குச் சிபாரிசு இல்லாமலே கடன் உதவி உண்டு.

உங்கள் வங்கி அலுவலர்களில் பலர் Transfer வேண்டும் வேண்டும் என்று அலைந்தும் கேட்ட ஊர்களுக்குக் கிடைக்கவில்லை என்று வருந்துகிறார்களே!

அனைவரும் நம் ஊர்ப் பக்கமே வரவேண்டும் என்று நினைத்தால் என்ன செய்ய முடியும்? மேலும் அங்குள்ளவர் அவ்விடத்தைவிட்டுப் போகமாட்டேன் என்றால் என்ன செய்ய முடியும்? இடம் காலியோ மாற்றமோ இருந்தாலன்றோ மாற்றல் செய்ய முடியும்? மேலும் டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பக்கம் சென்றால் பலவற்றைத் தெரிந்து கொள்ளலாம் வாழ்வில் முன்னுக்கும் வரமுடியும் - பல மாநிலங்களைப் பார்க்க வேண்டும் என்று ஒரு முறை வாய்ப்புக் கொடுப்போம். வேறு மாநிலங்களுக்கு Transfer வேண்டாம் என்றால் அனைவரையும் திருப்தி செய்ய முடியுமா?

உங்கள் குடும்பம் பற்றி....

எனது ஊர் அரண்மனை சிறுவயல். என் மனைவி பெயர் சரோஜா. எங்களுக்கு நான்கு பெண்களும் ஒரு பையனும். பெண்கள் நால்வருக்கும் திருமணம் செய்து விட்டோம். மகன் பிளஸ் 1 படிககின்றான்.

மாப்பிள்ளைகள் பற்றி..?

பாரத் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரியும் 2வது மாப்பிள்ளை தவிர அனைவருமே தொழில் செய்கிறார்கள். முதல் மாப்பிள்ளை டெக்ஸ்டைல்ஸ்; இன்னொருவர் ஃபைனான்ஸ். என் ஆச்சி மகனுக்குக் கடைசி மகளைச் செய்தோம். அந்த மாப்பிள்ளையும் விரைவில் ஒரு தொழில் தொடங்க இருக்கிறார். என் மகனையும் சொந்தக் காலில்தான் நிற்க வைப்பேன்.

'ஊருக்குத்தானடி உபதேசம். உனக்கும் எனக்கும் எதற்கு' என்பது போல் இல்லாமல் சொன்னதை உங்கள்

குடும்பத்திலேயே செய்து காட்டும் உங்களது செயலை எண்ணி வியக்கிறேன். மேலும் மதுரை வங்கியில் நீங்கள் பல பொறுப்பான பதவிகளில் இருந்தும் உங்கள குடும்பத்தினருக்கு வேலை போட்டுக் கொடுக்காதது, உங்கள் நேர்மையைக் காட்டுகிறது.

முதலிடம் கொடுக்கவுமில்லை; ஓரிடம் கொடுக்கவுமில்லை.



சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பாங்க் ஆப் மதுரையின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்களுக்குத் தொழிலதிபர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவிக்கும் காட்சி.

ஆமாம். எனது இரண்டாவது மகள் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியிலும் மூன்றாவது மகள் மெர்கன்டைல் கிரெடிட் கார்ப்பரேசனிலும் பணியாற்றி வருகிறார்கள்.

இப்பதவியில் இருந்து கொண்டு நீங்கள் சமுதாயத்திற்குச் செய்ய இருப்பது குறித்து..?

அமெரிக்க போர்டு பவுண்டேஷன் ஒத்துழைப்புடன் 'uplift of the society' என்ற நிறுவனத்தை திரு. குமாரசுந்தரம் காலத்தில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் திருப்புத்தூரில் தொடங்கினோம். கல்விக்கும் சிறுதொழிலுக்கும் ஏழை மக்களுக்கும் உதவி புரிவது என அதனைப் பதிவு செய்தோம். ஆனால் அது இயங்காமல் போய் விட்டது. அதனை மீண்டும் தொடங்கி திருப்புத்தூர், சிவகங்கை, திருமயம் போன்ற சுற்றுப்புற ஊர்களில் உள்ள மக்கள் முன்னேற உதவி செய்ய உள்ளோம்.

இதனைக் காரைக்குடியில் ஏன் தொடங்கவில்லை?

காரைக்குடியில் எலெக்ட்ரோ கெமிக்கல்ஸ் உள்ளது. குன்றக்குடியில் தவத்திரு அடிகளார் தொடங்கியிருக்கிறார்கள். பள்ளத்தூரில் சாரதா சேவாஸ்ரமம் உள்ளது. அதனால்தான் திருப்புத்தூரைத் தேர்ந்தெடுத்தோம்.

இப்பதவியில் உள்ள சிரமங்கள் பற்றி...

மக்களிடம் அதிக எதிர்பார்ப்புகள் உள்ளன. உதாரணமாக நீங்களே வந்து வேலை போட்டுத் தாருங்கள் என்றால் அதில் எத்தனையோ சிரமங்கள் உள்ளன. ஆனால் 'நான் முன்னுக்கு வரவேண்டும்; தொழில் செய்ய ஊன்றுகோல் தாருங்கள்' என்றால் கட்டாயம் கடன் கொடுத்து உதவி செய்யத் தயாராக உள்ளோம். இதுவே தான் நம்மினத்து இளைஞர்களுக்கு நான் சொல்வது.

''வாழ்க்கைக்கு ஒளிகாட்டியாக, வழிகாட்டியாக நாங்கள் இருக்கிறோம்' என்று எத்தனையோ வங்கிகள் கூறுகின்றன; உதவி செய்கின்றன. இன்று நீங்களும் கூறிவிட்டீர்கள். இனிமேல் பயன்படுத்தி கொள்பவர்களைப் பொறுத்து தான் அது உள்ளது'' என்று கூறி நன்றி தெரிவித்து விடை பெற்றேன.

திரு. சபாபதி அவர்களின் அந்தரங்கச் செயலாளர் திரு. கே. ஆர். சுப்ரமணியன் அவர்கள், தலைவரைப் பார்க்க, பேட்டி காண உதவி புரிந்ததற்கு அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெற்றேன்.

நேர்முகம் : காரைக்குடி கல்யாணி

வெற்றிக்கு வழி

ஃ தெளிவாகத் திட்டமிடுதல் வெற்றி மாளிகைக்கு அடிப்படை.

ஃ நீங்கள் வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள்; ஏனென்றால் வாழ்க்கை நேரத்தால் ஆனது!

ஃ மனநிறைவைப் போன்ற நலமும், ஒழுக்கத்தைப் போன்ற அணிகலமும், உடல் நலத்தைப் போன்ற பேறும் உலகில் வேறெதும் இல்லை.

ஃ கட்டுப்பாடற்ற பேச்சுத்தான் பலதொல்லைகளுக்குக் காரணம். வாயை அடக்கக் கற்றுக் கொள்வதே வாழ்வில் வளம்பெற வழி.

ஃ நீண்ட தூரம் ஓடிவந்தால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்.

ஃ நிதானமாகத்தான் சிந்திக்க வேண்டும்; ஆனால் விரைவாகச் செயல்பட வேண்டும்.

ஃ இடுப்புக்கு வேட்டி - மேலுக்குச் சட்டை என்பது போல, முகத்துக்குப் புன்னகை.

ஃ நடந்தால் நாடெல்லாம் உறவு; படுத்தால் பாயும் பகை.

ஃ பாராட்டுங்கள்; யாருக்கும் பாராட்டுப் பிடிக்கும். உங்களையும் திருப்பிப் பாராட்டுவார்கள்.

ஃ வெற்றியின் ரகசியம் எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.

(பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்களின் ''வெற்றிச் சிந்தனைகள்'' என்ற நூலிலிருந்து)

— அள. சித சொ. தெ. சொக்கலிங்கம்
காரைக்குடி

வரலாறு படைக்கும் வானதி பதிப்பகம்

புத்தக வெளியீட்டுத் துறையில் முன்னணியில் இருக்கும் நிறுவனங்களில் வானதி பதிப்பகம் மிகப் பெரியது. 1955ல் தொடங்கப்பட்ட இது, 1982ல் வெள்ளி விழாக் கண்டது. ஆர். எஸ். மணி எழுதிய ''வெண் புரு'' (தமிழ்-நாவல்) இதன் முதல் வெளியீடாகும். இலக்கியம் சமயம், ஆன்மீகம், வாழ்க்கை வரலாறு, வாழ்வு முன்னேற்றம், உடல் நலம், பொன்மொழிகள், பழமொழிகள், பயண இலக்கியம், அறிவியல் வரலாறு, பல் துறைச் சிந்தனை, கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், சரித்திர நாவல்கள், சமூக நாவல்கள், சிறுவர்க்கான நூல்கள் என்று வானதி பதிப்பகம் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் 2300 நூல்களை வெளியிட்டுள்ளது.

காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகளின் அருள் வாக்குகள் ''தெய்வத்தின் குரல்'' என்ற பெயரில் ஐந்து பகுதிகளாக வெளியிடப் பெற்றுள்ளன. இதுவே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ''The Voice of Divinity'' என இரு பகுதிகளாக வெளிவந்துள்ளது.

திருமுருக கிருபானந்த வாரியாரின் 50 நூல்களை வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ''திருப்புகழ் விரிவுரை'', ''பழமுதிர்சோலை - ஆறு திருப்பதி'' ''கந்தர் அலங்காரம்'', ''கந்தவேள் கருணை'' போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

கவியரசு கண்ணதாசனின் 40க்கும் மேற்பட்ட நூல்களை வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ''அர்த்தமுள்ள இந்து மதம்'' மூன்று பாகங்களாக 16 பதிப்புகள் வெளிவந்துள்ளன. கண்ணதாசனின் கவிதைகள் ஏழு பாகங்களாகவும் திரை இசைப் பாடல்கள் மூன்று பாகங்களாகவும் வெளிவந்துள்ளன. கவிஞர் கண்ணதாசன் எழுதிய ''பொன் மழை'' (கனகதாரா ஸ்தோத்திரம்) நூலை மணி விழாச் செய்து கொள்ளும் வசதி படைத்தோர் நூற்றுக் கணக்கில் வாங்கி அன்பளிப்பாக வழங்கி வருகிறார்கள்.



மற்றும் மூதறிஞர் ராஜாஜி, கல்கி, நீதிபதி மு. மு. இஸ்மாயில், நீதிபதி எஸ் மகராஜன், டாக்டர் என். மகாலிங்கம், டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி, சாண்டில்யன், ஜெகசிற்பியன், கோவி. மணிசேகரன், பி. சி. கணேசன், பாலகுமாரன், அனுராதாரமணன், சிவசங்கரி, வாஸந்தி, வாசவன், பெ. தூரன், எஸ். எஸ். தென்னரசு போன்ற எண்ணற்ற எழுத்தாளர்களின் நூல்களை வானதி வெளியிட்டு புதிய வரலாறு படைத்துள்ளது.

நகரத்தார்களான வி. என். சிதம்பரம் செட்டியார், முனைவர் சுப. அண்ணாமலை, முனைவர் அறு. அழகப்பன், முனைவர் தே. ஆண்டியப்பன், புலவர் நாகசண்முகம்,

ஏவி. எம். சோமலெ, சின்ன அண்ணுமலே, பழ. பழநியப்பன் கவிஞர் மீனவன், முல்லே முத்தையா ஆகியோரின் பல நூல்களேயும் வானதி வெளியிட்டுள்ளது.

வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் பெருமைக்குரிய திரு. ஏ. திருநாவுக்கரசு தானும் இரண்டொரு நூல்களே எழுதி வெளியிட்டுள்ளார். அவை: சின்னத் தம்பியின் பெரிய உள்ளம், நினேக்க.. நினேக்க..

வானதியின் பல நூல்கள் சாகித்ய அகாதமியின் பரிசையும் தமிழக அரசின் பரிசையும் இலக்கியச் சிந்தனேயின் பரிசையும் பெற்றுள்ளன.

— "எல்லெஸ்"

திருமணம்

கோட்டையூர் ராம. கரு. சுப. அண்ணுமலே செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுந்தரராமனுக்கும், காரைக்குடி பெரி. பழ. வீர. சுப்பிரமணியன் செட்டியார் என்ற சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அழகம்மைக்கும் 8-4-90 அன்று காரைக்குடியில திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பகைவர்கள்

□ கடன் வாங்கிய தந்தை, கணவனுக்கு அடங்காத மனேவி, மூடனுன பிள்ளே, பாசமில்லாத தாய் ஆகியவர்கள் தனக்குத் தானே பகைவர்களாவார்கள்.

"இந்து தர்ம சாஸ்திரம்" நூலிலிருந்து —

ஆர்எம். வி. இராமசாமி



வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக சென்னேயில் 18-3-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராம. நாராயணனுக்கு கௌரவத் தலேவர் திரு. எஸ்பி. பழநியப்ப செட்டியார் பொன்னுடை அணிவிக்கும் கவின்மிகு காட்சி. அருகே - இடதுபுறம் பொருளாளர் திரு. ஏ. கே கிருஷ்ணன்.

'நானும் ஒரு நகரத்தார்...'

தமிழண்ணல்

5. சீரைப் பரப்பிவைக்கும் சீரற்ற விளம்பரங்கள்

பெண்ணுக்கு சீர்தனம், மாமியாருக்கு என்றெல்லாம் கொடுப்பது வாங்குவது பற்றிப் பிறகு சிந்திப்போம். இப்போது 'சாமான் பரப்புகிற' நாகரிகம் பற்றி எண்ணிப் பார்ப்போம். 'வெண்கலப் பாத்திரக்கடை, எவர்சில்வர்ப் பாத்திரக்கடை, பல்பொருள் அங்காடி' எனப் பரப்பி வைத்து, எல்லோரையும் பார்க்க அழைத்து விளம்பரப் படுத்தி மகிழ்ச்சியடைகிறோம். முன்பெல்லாம் சீர்தனப் பணத்தையும் கூட பெரிதாக எழுதி வைத்து, பணத்தையும் தட்டில் வைத்துக் காட்டினார்கள். கடன் வாங்கி, இப்படி விளம்பரமும் செய்துவிட்டு, 'எங்களைப் பிற்பட்டஇனம்' என்று அறிவியுங்கள் என்றால் எவன் ஒப்புக் கொள்வான்?

'பகட்டுகிற இனம்' என்று சொன்னது நினைவிருக்கிறதா? ஒவ்வொரு முறையும் ஒன்பது அடுக்கு, ஏழு அடுக்கு என 'அதையும் இதையும்' ஒப்பிட்டு ஒப்பிட்டு எவ்வளவு சச்சரவுகள் எழுகின்றன? இந்தச் சாமான்கள் எல்லாம் இன்று தேவை தானா? இன்றைய நாகரிகத் தேவைகள் வேறாக இருக்க, பத்துப் பதினைந்து அடுக்குகளால் பயன் என்ன? முதலாவது இந்தச் சாமான்களை வைக்க நம் ஊர்களில் வீடுகள் உள்ளனவா?

இவை பாதுகாக்கத் தக்க துணை இருக்கிறதா? 'பிலிப்சிகல்மான்' என்ற அமெரிக்கப் பேராசிரியர்-சோமலெ அவர்களுக்கு நண்பர்-நகரத்தார் பற்றி ஆராய்ந்து எழுதிய நூலில், இவ்வாறு வட்டியின்றி. "முடங்கிக்கிடக்கும் மூலதனமாக"ச் செட்டிநாட்டில் வீடு தோறும் சாமான்சட்டுகளில் கிடப்பன பலகோடி பெறும் என எழுதினார். வட்டிக் கணக்குப் பார்க்கும் செட்டியார்தான் இவ்வாறு முதலைச் சேர்த்து முடக்குகிறார். இதில் வெண்கலம், வெள்ளி, மரச்சாமான் போல்வன நாள்தோறும் விலை கூடிக்கொண்டே போகின்றன என்பது உண்மையே. நாம் இவை அனைத்தையும் புழங்கப் போவதில்லை. சாமான் வைக்கும் அறைகளுக்கு இப்போது கூடுதலான வாடகைவேறு. இவற்றில் கெட்டுப்போவனவும், களவு போவனவும் பல. எஞ்சியதை மகளுக்கு-மகள் பேத்திக்கு என்று இப்படியே போகின்றது. நான் கைக்கு மகள் என்றால் புதிதாக வாங்கியும் வைக்கப்படுகிறது.

காலப்போக்கில் தேய்மானம், வட்டி விகிதம், வாடகை யாவும் கணக்கப் பார்த்தால், இழப்பு எவ்வளவு என்பது தெளிவுபடும். காலத்திற்கு ஏற்ப வீட்டு மனை, வீடுகளை வாங்கிக் கொடுத்தால், சில ஆண்டுகளில் அது பன்மடங்காகும். பழைய கால மரபுப்படி அண்டா, அடுக்கல், துடைப்பம் யாவும் தேவைதானா? உள்ளூர் நகரக் கோயில்களில் 5, 6 செட்டுச் சாமான்கள் வாங்கி வைத்துவிட்டால், அதனை வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளலாமே? இன்று வெளியூர்களிலேயே காலம் காலமாகத் தங்குகிறோம். ஊருக்குப் போனால், சாப்பிட, குளிக்க சிறு வீடுகள் போதும். மிகப் பெரிய வீடுகள் ஊரில் தேவையா? இவற்றிலெல்லாம் முதலீடு செய்வன வட்டி நட்டமாகாதா? ஒருவர் இருவர் செய்து கொள்ளட்டும். எல்லோரும் சம்பாதிக்கும் ஊரிலும் வீடு, சொந்த ஊரிலும் சாமான்களைப் போட்டு வைக்க, பரப்ப வீடு என முதலீடு தேவையா? எனக்குத் தெரிய, இப்படிப்பரப்பப்படுகிற சாமான்கள் பல எடுக்கப்படுவதேஇல்லை. அடுத்த பரம்பரை-வாரிசு-மகள்-பேர்த்தி திருமணங்களிலேதான் இவை எடுக்கப்படுகின்றன. இதை ஒரு பழைய பழக்கமாகவும், வேண்டாத பழக்கமாகவும் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

இதைப் பார்க்கும் பிற சமூகத்தவர், நம்மை நேரில் பாராட்டினாலும் உள்ளூற நம்மை போலிக் கௌரவம் பாராட்டும்- வீண் பகட்டுப் பகட்டும் -விளம்பரக்காரர்கள் என்றும் நினைக்கிறார்கள் அவர்கள் நம் ஊரில் நுழைகிறபோதே சன்னலும் கதவும் பிடுங்கப்பட்ட, பாழடைந்த மண்டபங்களனைய நம் குட்டிச்சுவர்களைப் பார்த்து விடுகிறார்களே! நாம் ஒருவரைத் திட்டும்போது 'போடா, குட்டிச் சுவராப் போ' என்போம். நாமும் குட்டிச்சுவராகப் போய்க் கொண்டிருக்கிறோம்! யாரோ நம் இனத்தவர் ஒருவர் வீடுதானே குட்டிச் சுவரானது; நமக்கு என்ன என்று அலட்சியப் படுத்தாதீர்கள். அது நமக்கும் வந்த தீமை என்றே எண்ணிப் பாருங்கள். ஊரின் கடைக் கோடியிலே பற்றிய நெருப்பு நம் வீட்டை நெருங்கவே நெருங்காது என்று கூற முடியுமா?

முதலாவது: எவ்வளவு சாமான் வேண்டுமானாலும் கொடுக்கட்டும்; அதைப் பரப்பவே கூடாது. எதை வேண்டுமானாலும் கொடுப்பது அவரவர் உரிமை; பரப்புவது சமூகக் குற்றம். இதனால் சமூகத்தை மேன்மேலும் குற்றம் செய்யத் தூண்டுகிறோம்.

எனவே,

சாமான் கொடுப்பது குற்ற மன்று; அதைப் பரப்புவது தான் கடுங்குற்றம்.

நம் பெரியவர்கள் பலர் இவ் வாறு சாமான் பரப்புவதைத் தடுக்க அறப்போராட்டம் நிகழ்த்தியதாகக் கேள்விப்பட்டி ருக்கிறேன்.

இன்று போராட்டம் வேண் டாம். அவரவராக உணர்ந்து, கொடுக்கிற பொருளை எல்லாம் சரக்குந்தில் ஏற்றி அனுப்பிவிடுங் கள். வெளியே பரப்பி, நம் கவுரவத்தைப் பெருக்கிக் கொள்ள நினைக்க வேண்டாம் சாமானைத் தேவையின்றி இலட்சக்கணக்கில் செலவழித்து வாங்குவது, அவற்றைக் கூடுதல் வாடகைக்குப் பல ஆண்டுகள் போட்டுவைப்பது, வட்டியில்லா மூலதனமாக முடக்கி சாமானின் விலை ஏற்றத்தைவிட இழப்பே பெரிதாகும் காலம் வரை அதைப் பாதுகாப்பது - பிறகு அடுத்தவருக்கு அதையே வைத் துப் பூட்டுவது இவையாவும் இந்தச் சமுகம் செட்டுள்ள- சிக் கனமான - இனம் என்பதை அறவே மறுதளிக்கவில்லையா? நெஞ்சில் கைவைத்துச் சொல் லுங்கள்? பகட்டுகிற சமுகம், போலிக் கவுரவம் பாராட்டுகிற சமுகம் என்றெல்லாம் கூறலாமே தவிரச் சிக்கனமான சமுகம் என் பது எப்படிப் பொருந்தும்?

அடுத்தமுறை நம் 'முறைதலை'யைப் பற்றிச் சிந் தித்து இதுமுறைதானா என்று கேட்க எண்ணியுள்ளேன். அதைப் பற்றியும் இப்போதே கொஞ்சம் சிந்தித்து வையுங்கள்

(வளரும்...)

துலாவூர் சாலையில் கட்டுமான வளைவும் பேருந்து நிழற்கூடமும் அமைக்க ஏற்பாடு

நகரத்தார் பெண்கள் குரு பீடமான துலாவூர், குன்றக்குடியிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. குன்றக்குடியிலிருந்து துலாவூர் செல்லும் விலக்குப் பாதை நுழைவு வாயிலில் பொது மக்களின் சௌகரியத்திற்காக ஒரு கட்டுமான வளைவும் (Arch) பேருந்து நிழற் கூடமும் (Bus Shelter) அமைத்துக் கொடுக்க தேனிபட்டி திரு. இராம. ஏகப்பன் அவர்களும் கண்டவராயன்பட்டி திரு. ஏஎல். எஸ். அழகப்பன் அவர்களும் ஒப்புக் கொண்டு அதற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அப்பணிகளுக்கு ரூ. 50,000 வரை செலவு ஏற்படுமென்றும் அந்த நல்ல பணிக்கு நகரத்தார்கள் தங்களால் இயன்ற பொருளுதவியினை கீழ்க்காணும் முகவரிக்கு காசோலையாகவோ வங்கி டிராப்ட்டாகவோ அனுப்பி உதவுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

முகவரி: இராம. ஏகப்பன்/ ஏஎல். எஸ். அழகப்பன், 1248 மில் ரோடு, த. பெ. எண்-99 கோயமுத்தூர்-641001.

சென்னையில் பாராட்டு விழா

சென்னை வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பில் 18-3-90 ஞாயிறன்று மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்களுக்கும் காரைக்குடித் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. இராம. நாராயணன் அவர்களுக்கும் அம் மன்றத்தின் கௌரவத் தலைவரும் நமது இதழின் ஆசிரியருமான திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் பாராட்டுவிழாச் சிறப்பாக நடைபெற்றது.

மன்றத்தின் தலைவர் வெற்றியூர் திரு. எம்ஆர். சுப்பையா வரவேற்றுப் பேசினார்.

திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தமது தலைமை உரையில் திரு. சபாபதி அவர்களின் உழைப்பையும் திறமையையும் நகைச் சுவை ததும்ப எடுத்துரைத்தார்கள். திரு. இராம. நாராயணன் நம் சமூகத்திற்குக் கிடைத்த பெரும் பேறு என்றும் அவரால் நம் சமுகம் பயன்பெற வேண்டுமென்றும் நம் சமூகத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அனைவரும் பாடுபட வேண்டுமென்றும் திரு இராம. நாராயணனும் முயற்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மற்றொரு கௌரவத் தலைவ

ரான கண்டனூர் திரு. எஸ்பி. பழநியப்ப செட்டியார் அவர்கள் தமது உரையில் நம் சமூகம் முன்னேற அனைவரும் சுயதொழில் செய்து பொருளீட்ட முன்வர வேண்டுமென்றும் ஒற்றுமையோடு பாடுபட வேண்டுமென்றும் ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மன்றத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் பொருளாளர் மிதிலைப்பட்டி திரு. ஏ. கே. இருஷ்ணன் எடுத்துரைத்தார்.


மன்ற அறிக்கையை மன்றச் செயலாளர் கடியாபட்டி திரு. எஸ். முத்து வாசித்தார்.

திரு. சுப. சபாபதி அவர்களுக்கும் திரு. இராம. நாராயணன் அவர்களுக்கும் மன்றத்தின் கௌரவத் தலைவர்கள் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் திரு. எஸ்பி. பழநியப்ப செட்டியார் அவர்களும் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன், திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன், மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன், திரு. இராம. சிந்தாமணி, திருமதி உமையாள்முத்து, திரு. கண்மணி சுப்பு ஆகியோரும் விழாவில் சிறப்புரை ஆற்றினர்.

ஏற்புரையில் திரு. சபாபதி அவர்களும் திரு. இராம. நாராயணன் அவர்களும் நமது சமூக முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் தங்களால் இயன்ற அளவு உதவுவதாகவும் பாடுபடுவதாகவும் வாக்களித்தனர்.

சென்னை நகரத்தார் சங்கம்



வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக சென்னையில் 18-3-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்களுக்கு அம்மன்றத்தின் கௌரவத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவிக்கும் கவின்மிகு காட்சி.

களின் கூட்டமைப்புக் குழு ஆதர வில் சென்னையில் நடைபெற விருக்கும் கூட்டுத் திருமணத் திற்கு ரூ. 5000/- நன்கொடை தருவதாக திரு. இராம. நாரா யணன் கூறினார்.

மன்றத்தின் துணைச் செயலா ளர் கண்டனூர் திரு. ஆர்எம். சொக்கலிங்கம் நன்றி கூற தேநீர் விருந்துடன் விழா இனிது முடிந் தது.

திருத்தம்

''நகரத்தார் குரல்'' ஏப் ரல்'90 இதழில் 20 ஆம் பக்கம் வெளியாகியுள்ள திரு. வ. சுப. மாணிக்கனார் பற்றிய செய்தியில் ஆத்திசூடி. கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, உலகநீதி, மூதுரை, நன்னெறி, நல்வழி ஆகியவற்றிற்கு 'ஏழினந்தமிழ்' என அவர்கள் பெயர் சூட்டினார் கள் என இருக்கிறது. அதை ஏழிளந்தமிழ் எனத் திருத்தி வாசிக்க வேண்டுகிறோம்.

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் அறிவிப்பு

1990-91 ஆம் ஆண்டிற்கு மாணவர்களுக்குப் பட்டப் படிப் பிற்கும் பாலிடெக்னிக் படிப்பிற் கும் திருப்பித் தரும் உதவியாக வும் மாணவிகளுக்கு M B. B. S., B.E. மற்றும் B. Tech படிப்பிற்கு திருப்பித் தரும் உதவியாகவும் மற்ற பட்டப்படிப்பு, பாலிடெக் னிக் படிப்பிற்கு இலவசமாகவும் கல்வி நிதி உதவி வழங்கப்படு மென்றும் கல்வி நிதி உதவி விண்ணப்ப பாரம் வேண்டுவோர் கீழ்க்காணும் முகவரிக்கு விண் ணப்பித்துப் பெற்றுக் கொள்ள லாமெனவும் சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கம் அறிவித்துள்ளது.

முகவரி: செயலாளர், நகரத் தார் ஐக்கிய சங்கம், 88 பவளக் காரத் தெரு, சென்னை-600001

திருமணம்

காரைக்குடி ஆர்.எம். வி. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கும் பள்ளத்தூர் எஸ். பழநியப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் கருத்தான் D.C.A. க்கும் 12-2-90 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தையொட்டி வாழ்த்தரங்கமும் நடைபெற்றது.

"மன உற்சாகம்"

மனம் உற்சாகமாக இருந்தால்தான், செய்யும் வேலையைச் சுறு சுறுப்புடனும், முழு ஈடுபாட்டுடனும் செய்யமுடியும். மனம் சோம்பினால் உடலும் சோம்பும். செய்யும் வேலையும் தடைப்படும். மனதிற்குப் பயிற்சி தராவிட்டால் மனம் மங்கிவிடும்.

மனதைப் பளிச்சென்று வைத்துக்கொள்ள மனதிற்கு அறிவையும், விழிப்பையும், உற்சாகத்தையும் தருகிற நூல்களைத் தேடிப் பிடித்துப் படிக்க வேண்டும். மறந்து விடாதீர்கள்! சில புத்தகங்கள் வரலாற்றின் திசையையே திருப்பியிருக்கின்றன; தனி மனிதனின் வாழ்க்கையின் போக்கையே மாற்றியிருக்கின்றன.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் சுயசரிதைகள் கிரியா ஊக்கி போன்றவை. வெவ்வேறு விதமான மனிதர்களை நாம் இந்தச் சுயசரிதையில் சந்திக்க முடியும். இப்படிப்பட்ட நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் போது. தலைசிறந்த சிந்தனையாளர்களுடன் நாம் உறவாடுகிறோம்.

பொழுது போக்கிற்காகப் படிக்கும் புத்தகங்களை Books of hour என்றும். எப்போதும் நிலைத்த பலனைத் தரவல்ல புத்தகங்களை Books of all time என்றும் வர்ணிக்கிறார், பேரறிஞர் ரஸ்கின் ஒருதுளிப் பேனா மை, கோடிப்பேரைச் சிந்திக்கச் செய்யவல்லது என்கிறார் பைரன். நாம் எவ்வளவு படிக்கிறோமோ, அதைப் பொறுத்துத்தான், நமது அறியாமை நம்மைவிட்டு நீங்குகிறது என்கிறார் ஷெல்லி.

— மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்.

மணிவண்ணன் மடல்..

5. கலியாணச் சந்தை

அன்புள்ள அண்ணனுக்கு,

சென்ற மடலில் வரதட்சிணைப் பிரச்சினையைத் தொட்டு, அடுத்த மடலில் தொடர்வதாக எழுதியிருந்தேன். நான் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஏதோ, வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறேன் என்று எண்ணிவிடாதீர்கள். இதன் தொடர்பாகச் சில யதார்த்தமான நிலைகளை உங்களுடன் -இந்தத் திறந்த மடலில் பரிமாறிக் கொள்ளத்தான் விரும்புகிறேன்.

வரதட்சிணை நகரத்தாருக்கு மட்டுமல்ல, நாடு முழுவதற்கும் உள்ளபிரச்சினை. இந்துக்களுக்கு மட்டுமல்ல, எல்லா மதத்தாருக்கும் உள்ள பிரச்சினை. ஆனால் இந்தப் பிரச்சினை பக்கத்திலும் வராத கோடிக்கணக்கான மக்கள் நம் நாட்டில் இருக்கின்றனர். அவர்கள் பொருளாதாரத்தில் கடைசித்தரமாகவும் வறுமைக் கோட்டிலும், அதற்குக் கீழும் உள்ளவர்கள். உயர்ந்த தர மக்களிடம் வரதட்சிணை இருக்கிறது. ஆனால் அது அவர்களைத் தாக்கவில்லை. நடுத்தர மக்களே அதன் தாக்குதலுக்கும் பாதிப்புக்கும் உள்ளானவர்கள்.

சமூக ரீதியில் 20 ஆண்டுகள் முன்புகூடத் தாழ்ந்த பொருளாதார நிலையில் இருந்து, பிறகு

விவசாயம், வியாபாரம், தொழில் என்பவற்றால் சமூக ரீதியாகப் பொருளாதாரத்தில் உயர்ந்து விட்டவர்களிடம இப்பொழுது வரதட்சிணை புகுந்துள்ளது.

படிப்பு, அதனால் பரவலான வேலை வாய்ப்பு, பணவசதியை ஏற்படுத்திக் கொள்ளும் நிலைமை, அல்லது வியாபாரம், தொழில்- இவற்றால் பணவசதி- இந்த வசதியால் சமூக அந்தஸ்து, எந்த எந்தச் சாதிகளுக்கு, எத்தனை தலைமுறைகளாக இருந்து வருகிறதோ, அந்தக் காலத்தின அளவிற்குத் தகுந்தபடி, அவர்களிடம் வரதட்சிணைப் பிரச்சினை, மிக்க ஆழமானது முதல் சாதாரணமான நிலை வரை இருந்து வருகிறது. நகரத்தார் சமூகத்தில் 80 ஆண்டுகளுக்கு முன், ஆண்கள் எண்ணிக்கை மிகுதியாகவும், பெண்கள் எண்ணிக்கை குறைவாகவும் இருந்த போது, மேலே சொன்ன அந்த சூழ்நிலை காரணமாக, பெண்ணுக்கு வராகன் கணக்கில் மாப்பிள்ளை வீட்டார் கொடுத்தால்தான் பையன் கலியாணம் நடக்கும் (இந்த மடலைப் படிக்கும், நம் குலக் கன்னிப் பெண்கள், அப்படி ஒரு காலம் இப்போது வரக்கூடாதா என்று பெருமூச்சு விடுவது கேட்கிறது.)

எனவே வரதட்சிணை ஒரு சமூகப் பிரச்சினை. ஒரு குடும்பத்தின் பிரச்சினையோ, தனிப்பட்டவர் பிரச்சினையோ அல்ல. கலியாண வயது வந்த பையனின் தந்தையோ, தாயோ இந்தப் பிரச்சினையை உண்டாக்கவில்லை. 'வரதட்சிணைக்கு யார் காரணம்?- செட்டியாரா, ஆச்சியா' என்று பட்டிமன்றம் நடத்துவதெல்லாம் தவறு.

பையன்கள் வரதட்சிணை கேட்கும் டி தம் பெற்றோரைத் தூண்டுகின்றனரா என்றால், சில பையன்கள் தமது மேற்படிப்பிற்காகவோ, வேலை வாங்கும் இடங்களில், அது எளிதாகக் கிடைப்பதற்குச் செலவு செய்யவோ, பணம் கிடைத்தால் நலம் என்று எண்ணுவது உண்மை. கலியாணம் ஆக வேண்டிய சகோதரிக்கு வரதட்சிணை கொடுப்பதற்காக, தன் மனைவி பெரும் பணம் வரதட்சிணையோடு வந்தால், தன் பாரம் சிறிது குறையும் என்று எண்ணும் பையன்களும் உண்டு. இதுவும் சமூகப்பிரச்சினையின் விளைவே. ஆனால் இந்த வகை மிக மிகக் குறைவுதான். பெரும்பாலும் வரதட்சிணை வாங்கும் விஷயத்தில் பையன் கலந்து ஆலோசிக்கப்படுவதில்லை. அது பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். பையன் தலையிட முடியாது. தலையிட அனுமதிக்கப் படுவதும் இல்லை.

பையனின் பெற்றோருடைய பொருளாதார நிலைக்கு தக்கபடி வரதட்சிணை முடிவு செய்யப்படுகிறது. ஆகவே சம அல்லது உயர்ந்த பொருளாதார நிலை உடையவர்கள் தாம், அவர்கள் வீட்டில் பெண்ணைக் கொடுக்க முடியும். மற்றவர்கள் வீட்டில் பெண் கொள்ள இந்தப் பையனின் பெற்றோர் சம்மதிக்க மாட்டார்கள். எனவே, இன்று வரதட்சிணை, நமது சாதிக்குள்ளேயும், குடும்ப அந்தஸ்து பற்றிய கௌரவப் பிரச்சினையாக உருவெடுத்து விட்டது. அதுமட்டும் அல்லாமல், வரதட்சிணை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக வாங்குகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு கௌரவம் வந்து சேருகிறது என்ற மனப்பான்மையும் உண்டாகிவிட்டது.

ஆதலால், செல்வர் ஏழையின் வீட்டில் தம் பெண்ணைக் கொடுப்பது என்பது நடைபெறவில்லை அப்படிக் கொடுத்தால், வரதட்சிணை எவருக்கும் பிரச்

சினையாக இராது. மாப்பிள்ளை வீட்டாருக்கோ, மாப்பிள்ளைக்கோ உதவியாகவும் இருக்கும். அதுதான் அப்படியென்று, பெண்ணின் பெற்றோரின் விருப்பத்தைப் பார்த்தால், இந்தச் சிக்கலின் மற்றொரு காரணம் புரிகிறது. அவர்கள் தம்மைவிட உயர்ந்த அந்தஸ்து - பணத்தாலோ, பணத்தைச் சம்பாதிக்கும் திறமையாலோ, உடைய பையனுக்குத்தான் பெண்ணைக் கொடுக்க விரும்புகின்றனர். அதனால், கடன் வாங்கியாவது, சொத்துக்களை விற்றாவது, அதிக வரதட்சிணை கொடுக்கப் போட்டியிடுகின்றனர்.

இதனால் கலியாணச் சந்தை உருவாகிவிட்டது. தானிய, தங்கச் சந்தையிலாவது விலைகள் ஏறும்; இறங்கும். கலியாணச் சந்தையில, எப்போதும் விலை ஏறுமுகந்தான்.

தொடர்கின்றேன் அடுத்த மடலில்

அன்புள்ள

மணிவண்ணன்.

நம் நாகரிகம்

உரையாடல் நாகரிகத்தில் செட்டிநாட்டு ஆச்சிமார்களை எவரும் விஞ்ச முடியாது!

ஒரு பெண் - அண்மையில் தாய்மை உற்றவள் - தன் குழந்தையை மடியில் ஏந்தி இருக்கிறாள். குழந்தை அழுகிறது. குழந்தையின் ஆயாள், அக்குழந்தை பசியினால்தான் அழுகிறது என்று உணர்ந்து. குழந்தைக்குப் பாலூட்டும்படி தன் மகளை அறிவுறுத்துகிறாள். அது சமயம், வேற்று ஆடவர் ஒருவர் அச் சூழலில் இருந்ததால், தன் மகளிடம், அந்த ஆச்சி, "குழந்தையை அமர்த்து" என்று நாகரிகமாகக் கூறுகிறாள். பாலூட்டிக் குழந்தையின் பசியைத் தணிவிப்பது (அமர்த்துவது) என்பது அத்தொடரின் பொருளாகும். நம்மவரின் உரையாடல் நாகரிகத்துக்கு (Conversational etiquette) இது ஒரு பெருஞ் சான்று.

— கவிஞர் இராகவன்முத்து

சக்கரத்தாழ்வார்

"பிரயோக ஸ்துதி" என்பது ஒரு வகையான தோத்திரப் பாடல் வகை. கடவுள் வடிவங்களைப் பற்றிய பாடலைப்போலவே கடவுளர் கைகளில் இருக்கும் கருவிகளைப் போற்றிப் பிரார்த்தனை செய்வது இவ்வகைப் பாடல்களின் நோக்கம். அருணகிரியார் அருளிய வேல்விருத்தம் இவ்வகைப் பாக்களில் தலைமையானது, அதைப் பின்பற்றிச் "சத்துரு சங்காரவேல் பதிகம்" என்ற ஒரு பதிகம் பிறந்தது. இவ்வகையில் காத்தல் கடவுளான திருமாலின் கையில் இருக்கும் சுதர்சனம் என்ற சக்கரத்தைப் போற்றும் பாசுரங்கள் தமிழில் இதுவரை வெளிவரவில்லை. "சக்கரத்தாழ்வார்" என்று சிறப்பிக்கப் பெறும் இந்தச் சுதர்சனத் திருவாழியைப் போற்றும் பாசுரம் வடமொழியில் "பஞ்சாயுத ஸ்தோத்திரம்" என்ற தொகுப்பில் ஒன்று மட்டும் உள்ளது. இப்பொழுது முதல் முறையாக இச் சக்கரத்தாழ்வாரை வேண்டும் பதிகம் ஒன்று வெளிவந்திருக்கிறது இதனைக் கவிஞர் திரு. இராகவன் முத்து அவர்கள் இயற்றியுள்ளார். அப்பதிகம் ஜூன்'90 "நகரத்தார் குரல்" இதழில் முழுமையாக வெளிவரும்.

வள்ளுவர் மன்ற ஆண்டு விழாவும் பாராட்டு விழாவும்

மேலைச்சிவபுரி வள்ளுவர் மன்றத்தின் 34ஆம் ஆண்டு விழாவும் பதிப்புச் செம்மல் முனைவர் ச. மெய்யப்பன் அவர்களுக்குப் பாராட்டு விழாவும் மேலைச்சிவபுரியில் 15-4-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

'அறமனச் செம்மல்' சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் விழாவிற்குத் தலைமை யேற்றார்கள். திரு. சுப்பையா வரவேற்றார்.

முனைவர் ச. மெய்யப்பன் அவர்களுக்கு 'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டுரை வழங்கினார்கள்.

காப்பியக் கவிஞர் திரு. நா. மீனவன், புலவர் மாமணி திரு. மா. முத்துராமன், செல்வி பதிப்பகம் திரு. வீர. சிவராமன், திரு. அய்க்கண், திரு. சுப. சீனிவாசன் திரு. முருகேசன், விகடம் திரு. காசிச் செட்டியார் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

முனைவர் திரு. ச. மெய்யப்பன் ஏற்புரை வழங்க, வள்ளுமன்ற நிறுவனர் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் நன்றி கூறினார்.

இவ்விழாவில் திரு. ச. மெய்யப்பன் வள்ளுவர் மன்றத்திற்கு ரூ. 5000/- நன்கொடை வழங்கினார்.

சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா

''ஒரே பூக்குவியலிலிருந்து, பலவிதமான மாலைகளையும் தொடுத்து விடமுடியும். அதைப் போலவே, அநித்யமான மனிதன் தன்னுடைய ஒரே பிறவியிலேயே எத்தனையோ விதமான நற்காரியங்களைச் சாதித்து விடமுடியும்'' என்ற புத்தர் பிரானின் திருவாக்கை மெய்ப்பித்த மேதாவிகளில் திரு. சொ. முருகப்பாவும் ஒருவர்.

பக்திச் செல்வமும், பொருட் செல்வமும், செட்டி நாட்டில் நிரம்பி இருந்ததால் எடுத்த காரியத்திற்கெல்லாம் எதிர்ப்புப் பலமாக இருந்தது.

திருமணத்தில் பெண்ணுக்கு விலைகொடுக்கும் பழக்கம் அப்போது சர்வசாதாரணம். பெண் கல்வி பேசப்படாத ஒன்று. பெண்ணை வணிகப் பொருளாக்கி, விலைபேசும் பழிகண்டு, உள்ளம் கொதித்து எத்தனையோ பேசி எழுதிப் பெண்ணின் பெருமையை உணர்த்தினூர், திரு. சொ. முருகப்பா.

செந்தமிழ்ப்புலவர் திரு. வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் அவர்கள் பழமைப் பற்றுமிக்கவர். நல்ல புலவர்.

அவர்களுடன் திரு. முருகப்பா ஒருமுறை பெண்விலை பற்றிக் குறிப்பிட்டு வருத்தமுற்றூர்கள். திரு. முருகப்பாவின் புதுமைக் கருத்தும் பேச்சுத் திறனும், வயிநாகரம் அவர்களைக் கீழ்க் கண்டவாறு பாட்டாகப் பாட வைத்து விட்டது:

''மின் அனைய மடவார்க்கு
விலை என்ன? விண்செலவு
வேண்டுந்தானே?
பன்னரிய கல்விக்குப்
பணம் எங்கே? ஏழையென்று
பாரிற் சூழ்ந்த
இன்னலுக்கு விடைகாண
வேண்டாவே? இரக்கமெலாம்
குடி போயிற்றே?
உன்னுக! ''என்று
உரைத்த மொழி
முருகப்ப! கேட்டு மனம்
உருகினேனே.''

பிரசாரம் வலுக்க, கொள்கை பரவ பத்திரிகைகளே சிறந்த சாதனம் என்பதில் திரு. சொ. முருகப்பாவுக்கு அபார நம்பிக்கை.

''சீர்திருத்தத் தொண்டோடு, இலக்கியத் தொண்டிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் திரு. சொ. முருகப்பா. தமிழ் இலக்கியங்களில் சிறந்த புலமை உடையவர். இதய



நோயால் சிரமப்பட்ட போதும் அவருடைய பணிக்கு ஓய்வே இல்லை. அஞ்சா நெஞ்சுடைய செயல் வீரர் அவர்.'' என நீலாவதி இராம. சுப்பிரமணியம் அவர்கள், திரு. சொ. முருகப்பா பற்றி ''பாரதி'' 1956 அக்டோபர் இதழில் குறிப்பிட்டிருக்கிறூர்.

அன்றைய நிலைவேறு; இன்றைய நிலைவேறு. இப்போது நகரத்தார் பொது நல மன்றங்கள் தோன்றி பல நன்மைகள் புரிந்

இட முயற்சிப்பது, பாராட்டப் படவேண்டிய ஒன்று.

இப்போது திருமணங்களில் ஏற்படும் செலவுகளையும் முறைகளுக்கென செலவிடும் தொகைகளையும் குறைத்து, அதைப் பயனுள்ள நல்ல வழிகளில் செலவு செய்தால் நம் சமூகமும் நாடும் முன்னேறும். இன்றைய இளைஞர்கள் சிந்தித்து, சீர்திருத்தச் செம்மல்களாக மாறினால் நல்லது.

— மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

நகரத்தார் புத்தக வங்கி

நகரத்தார் புத்தக வங்கியின் பொதுக் குழுக் கூட்டம் 23-3-90 அன்று மாலையில் மதுரை நகர விடுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திரு. பழ இராமசாமி தலைமை தாங்கினார். செயலாளர் அரை ஆண்டு அறிக்கையை வாசிக்க, பொருளாளர் அரை ஆண்டுக் கணக்கைச் சமர்ப்பித்தார். பின்னர் சில தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன. படித்த நகரத்தார் இளைஞர்களுக்கு வேலை அளிக்க நகரத்தார் சங்கங்கள், நகரக் கோவில்கள். பொது நிறுவனங்களை வலியுறுத்துவது என்பது அவைகளில் என்று.

பொதுக் குழுக் கூட்டத்திற்குப் பின் முதுநிலை மாணவர்களுக்கு வழியனுப்பு விழா நடைபெற்றது. நகரத்தார் இளநிலை மாணவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள். முதுநிலை மாணவர்களின் ''ஒரு நிமிடம்'' கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

நகரத்தார் பயிற்சி மையம் தொடக்க விழா

நகரத்தார் புத்தக வங்கி, நகரத்தார் ஆசிரியர்களைக் கொண்டு நகரத்தார் மாணவர்களுக்காக இரண்டாம் ஆண்டாக பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. இதன் தொடக்க விழா மதுரை தியாகராசர் நன்முறைப் பள்ளியில் 23-4-90 அன்று காலை 9 மணி அளவில் முனைவர் சுப அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமதி சுலோசனா சேவுகன் செட்டி வரவேற்புரை நிகழ்த்தினார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலா

ளர் திரு. கரு. பழநியப்பன் சிறப்புரையாற்றினர். வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி நன்றி கூறினர்.

இந்தப் பயிற்சி மையத்தில் M.B.B.S., B.D.S., B.E., B.Sc (Agri) ஆகிய பாடங்களில் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் 23-5-90 வரை நடைபெற உள்ளன. இதில் 70 மாணவர்கள் சேர்ந்து தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் பயிற்சி பெறுகின்றனர்.

நா. அருணசலனின் 80 ஆவது பிறந்த நாள் விழா

கண்டவராயன்பட்டி ஊராட்சித் தலைவரும் அருள் நெறித் திருக்கூட்டச் செயலாளரும் பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் கோவில் நிர்வாகத் தர்மகர்த்தாக்களில் ஒருவருமான திரு. நா அருணசலனின் 80 ஆவது பிறந்த நாள் விழா, சிறப்பு வழிபாடுகளுடன் பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் கோவிலில் 7-4-90 அன்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பாராட்டுக் கூட்டத்தில் காளையார் கோவில் கா. செ. மடாலய அதிபதி சிவானந்த சுவாமிகள், திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ராஜா சிதம்பரம், சிங்கம் புணரி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு இராம. அருணகிரி மற்றும் பலர் பாராட்டிப் பேசினர். பாரதக் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் பசும்பொன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன் ஆகியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

திருச்சி சுவாமிகளின் பிறந்த தின விழா

திருச்சி சுவாமிகளின் கைலாச ஆஸ்ரமத்தைச் சேர்ந்த ஸ்ரீராஜ ராஜேஸ்வரி கோயிலில் இவ்வாண்டு ராஜகோபுரம் எழுப்பிக் குடநீராட்டு நடந்ததை முன்னிட்டு இந்தப் பங்குனியில் வசந்த நவராத்திரி புண்ணியகாலத்தில் பத்துநாள் மகோத்சவம் சிறப்பாக நடைபெற்றது. தேரோட்டமும் அருமையாக நடைபெற்றது. 3-4-1990 அன்று பத்தாம்நாள் சப்தாபரண மண்டகப்படி கர்நாடக நகரத்தார்களுக்கு வழங்கப் பெற்றமையின் நகரத்தார்கள் அதனை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். அன்று கர்நாடக நகரத்தார்களுக்குப் பரிவட்ட மரியாதைகள் செய்யப் பெற்றன. அன்று காலை 11 மணி அளவில் ஸ்ரீ திருச்சி சுவாமிகளின் 63ஆவது பிறந்த தின விழாவும் மிகப் பெரிய அளவில் கொண்டாடப் பெற்றது. நாடுமுழுதும்

காரைக்குடியில் நூற்றி எட்டுப் பிள்ளையார்!

காரைக்குடி அ. மு, க. மு. அள. ராம. வள்ளியம்மை ஆச்சி அவர்களின் பெரு முயற்சியால் நகரத்தார் பெண்கள் பலர் ஒன்று சேர்ந்து காரைக்குடி நகரச் சிவன் கோவில் அருகே கீழ்கரையில் 108 பிள்ளையாரை பிரதிஷ்டை செய்துள்ளனர். சக்தி கணபதி, மகா கணபதி, சாம்ராஜ்ய கணபதி, நர்த்தன கணபதி, ஹேரம்ப கணபதி, விஜய கணபதி, சித்திபுத்தி கணபதி, லட்சுமி கணபதி என எட்டு கணபதிகளும் 50 வலம்புரி விநாயகரும் 50 இடம்புரி விநாயகரும் ஆக 108 பிள்ளையார் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. 108 பிள்ளையார் ஒரே இடத்தில் இருப்பது இந்தியாவிலேயே இங்கு தான் என்பது சிறப்பிற்குரியது.

இந்த 108 பிள்ளையாருக்கும் பங்குனி மீ 3 உ (16-3-90) அன்று வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு சர்வசாதகம் பிள்ளையார்பட்டி டாக்டர் கே. பிச்சைக்குருக்கள் தலைமையில் குடநீராட்டுச் சிறப்பாக நடைபெற்றது. குடநீராட்டு விழாவை திரு. மு. மெ. முத்துராமன் செட்டியார் அவர்களும் பிஎன். எஸ் எம். எல். இராமநாதன் செட்டியார் அவர்களும் சிவன் கோவில் அறங்காவலர்களும் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். அன்று இரவு பஞ்சவிநாயகர் புறப்பாடு நடைபெற்றது. காரைக்குடி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பில் தண்ணீர்ப் பந்தல் சேவை சிறப்பாக நடைபெற்றது.

இந்த 108 பிள்ளையாருக்கு தினமும் பூஜை நேரம் காலை 7 மணியிலிருந்து 9 மணி வரையும் மாலை 5 மணியிலிருந்து 7 மணி வரையும்.

இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். கர்நாடக நகரத்தார்கள் பாதகாணிக்கை செலுத்தி ஸ்ரீசுவாமிகளை வணங்கினர்.

நெய்வேலி சங்கத்தில் ஆண்டு விழா

நெய்வேலி நகரத்தார் பண்பாட்டுக் கழகத்தின் 16 ஆம் ஆண்டு விழா 14-4-90 அன்று ஒரு முழுநாள் நிகழ்ச்சியாகச் சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு அபிஷேக ஆராதனையும், நகரத்தார் ஆண் பெண் குழந்தைகளின் விளையாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றன. தேவகோட்டை திரு. சி. கதிரேசன் சொற்பொழிவாற்றினார். மாலை நிகழ்ச்சிக்குச் சங்கத் தலைவர் அரு. முத்துராமன் தலைமை தாங்கினார். செயலர் சோம. முத்தையா அறிக்கை படித்தார். பொற்கிழிக் கவிஞர் காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் வழக்காடு மன்றம் நடைபெற்றது 'பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிதும் தடையாக இருப்பவர்கள் ஆண்களே' என்று திருமதி சி. எஸ். விசாலாட்சியும், 'பெண்களே' என்று செல்வி முத்தழகம்மையும் வாதாடினா. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. கற்பக கணபதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினர். திருமதி மீனாட்சி கற்பக கணபதி பரிசுகள் வழங்கினார்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ செட்டிநாடு கொத்தரி அருள் மிகு சோலை ஆண்டவர் பூச்சொரியல் விழா 14-4-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ குருவிக்கொண்டான்பட்டி கவிமணி மன்றத்தின் 32 ஆம் ஆண்டு விழா 16 & 17-4-90 ஆகிய இருநாட்கள் சிறப்பாக நடைபெற்றன.

ஃ சக்தி ஆர் எம். முத்தையா அவர்களைத் தாளாளராகக் கொண்ட சென்னை செயின்ட் பால் மெட்ரிகுலேஷன் மேநிலைப் பள்ளியின் 21 ஆவது ஆண்டு விழாவும் பெற்றோர்கள் தின விழாவும் 21-4-90 அன்று சென்னை பாடியில் கொண்டாடப் பெற்றது.

ஃ சென்னை இலக்கியச் சிந்தனையின் இருபதாம் ஆண்டு விழா 13-4-90 அன்று சென்னை இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் கோயிலின் வருஷாபிஷேக விழா 21-4-90 அன்று 108 சங்காபிஷேகத்துடன் சிறப்பாக நடந்தேறியது.

ஃ தன வணிக நாட்டில் தொடக்க காலத்தில் சீர்திருத்தச் செம்மலாக விளங்கிய மகிபாலன் பட்டி மு. சின்னையாச் செட்டியார் அவர்கள் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களின் சகோதரர் ஆவார்கள்.

ஃ இராய. சொக்கலிங்கனார், சொ. முருகப்பா இருவரும் இளம் வயதிலேயே சிதம்பரஐயர் என்

பவரிடம் முறையாக இலக்கண இலக்கியங்களைப் பிழையறக் கற்றவர்கள்.

ஃ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு விழா குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்னையில் 16-3-90 அன்றும் சென்னை அண்ணாநகர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 18-3-90 அன்றும் நடைபெற்றன.


ஃ இராயவரத்தில் குழந்தைக் கவிஞரின் இல்லத்தில் 3-4-90 அன்று அன்னாரது தலைத் திதி நடைபெற்றது.

ஃ கலைத்தந்தை கருமுத்துத் தியாகராசச் செட்டியார் அவர்களின் மாப்பிள்ளையும் பூலாங்குறிச்சியைச் சேர்ந்தவரும் சேலம் நகரத்தார் சங்கத்தின் தலைவருமான எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் 80 ஆம் ஆண்டு பவள விழா 22-4-90 அன்று சேலத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஃ மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்களுக்கு 23-4-90 அன்று கண்டரமாணிக்கத்தில் பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

ஃ டாக்டர் திரு. என். என். கண்ணப்பன் அரிமா சங்கத்தின் மூலம் 184 ஆவது இலவச மருத்துவ சேவையை மதுரை கே. கே. நகர் கலைமகள் பள்ளியில் 10-3-90 அன்று நடத்தினர்.

ஃ வேந்தன்பட்டி அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் அமைந்திருக்கும் அருள்மிகு நெய் நந்தியெம்பெருமானுக்கு 24-3-90 அன்றும் 7-4-90 அன்றும் சனிப்பிரதோஷ விழா சிறப்பாக நடைபெற்றது.



தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர், பாலகவி வே. இராமநாதன் செட்டியார் - திருமதி மீனாட்சி ஆச்சியின் பவள விழாவில் (23-12-89) திரு. லெ நாராயணன் செட்டியார் தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கில் தமிழாகரர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை பேசும் காட்சி.

மேலைச்சிவபுரி வள்ளுவர் மன்ற விழாவில்...

சபையில் படித்த புலவர் மாமணி மா. முத்துராமன் சபை வழி சார்ந்து தோற்றுவித்த வள்ளுவர் மன்றக் கட்டிடத் திறப்பு விழா வுக்கு 1974ல் நானும் வி. என். சிடி. அவர்களும் வந்தோம். மன்றம் வெள்ளி விழாக்கண்டு இன்று நல்ல வளர்ச்சி பெற்றிருக் கிறது. நாங்கள் இருவரும் ராசிக்காரர்கள் என்பதற்கு இதுவே சான்று.

''மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்'' என, சில அறிஞர்கள் கூறுகின்றனர். அது எனக்கு உடன்பாடு அன்று. சாதா ரண மனித இனத்தோடு வள்ளுவரைச் சேர்க்கக்கூடாது. ஆதலால் அவரைத் 'தவ முனிவர்' என்று இம்மேடையில் கூறுகின்றேன்.

அற வழி பேணி நூல் வெளியிடு செய்வதே சிறந்த பணியாகும். அதனை திரு. ச. மெய்யப்பன் பாராட்டும் வகையில் செம்மையாகச் செய்து வருகிறார்.

— சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார்

பாஞ்சாலங்குறிச்சியில் பிறந்த சிறு பிள்ளைகட்கும் அந்த மண்ணை எடுத்து ஊட்டுவார்கள். காரணம் வீரம் வளரவேண்டும் என்பதற் காக. மேலைச்சிவபுரியில் பிறந்த சிறு பிள்ளைக்கும் தமிழைக் கவி யாய்ப் பாடும் ஆற்றல் உண்டு. பாஞ்சாலங்குறிச்சி - வீர மண். பைந்தமிழ் மேலைச்சிவபுரி - தமிழ் மண்.

அங்கிங்கெனாதபடி திரு. ச. மெய்யப்பன் எங்கும் நிறைந்திருக் கிறார். காலையில் காரைக்குடியில் பார்க்கிறேன். மறுநாள் அவரை மதுரையில் பார்க்கிறேன். வெளி நாட்டிலும் காண்கின்றேன். சுறு சுறுப்பாய் இயங்குவதில் அவருக்கு நிகர் அவரே.

இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் திரு. ச. மெய்யப்பனாரின் மாமனார் திரு. விகடம் காசிச் செட்டியார் அவர்களையும் திரு. ச. மெய்யப்பனாரையும் மாறி மாறிப் பார்க்கிறேன். இவருக்கு அவர் மாமனாரா அவருக்கு இவர் மாமனாரா என்பது தெரியவில்லை. காவன்னா அவர்கள் மிக இளமையோடு காட்சி தருகிறார்கள்.

— வி என். சிதம்பரம் செட்டியார்.

''உயிரின் விலை'' எனும் புத்தகத்தில் மூவாயிரம் பிரதிகள் அச்சிட்டிருக்கிறேன். அப்புத்தகம் எங்கும் கிடைக்காது! அவ்வளவு வரவேற்பு என நினைக்கிறீர்களா? ஆச்சரியப் படவேண்டாம். அத் தனையும் விலை போகாமல் என் வீட்டில் மூலையில் கிடக்கின்றது. இன்னல் தரும் புத்தக வெளியீட்டுத் துறையில் இன்பம் கண்டு மற்ற வருக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்பவர் பேராசிரியர் ச. மெய்யப்ப னார் அவர்கள்.

'கம்பன் புகழ் வாழ்க; கன்னித் தமிழ் வாழ்க' என்பது காரைக் குடியின் தாரக மந்திரம். 'வள்ளுவன் புகழ் வாழ்க; வண்டமிழ் வாழ்க' என்பது மேலைச்சிவபுரியின் மேலான மந்திரம்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

16 ஆண்டுகள் என்று கணக்குவைத்து திரு. மா. முத்துராமன் எங்களை மன்றத்திற்கு அழைத்திருக்கிறார். நானும் திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் மீண்டும் சேர்ந்து வந்திருக்கிறோம்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

திரு. ச. மெய்யப்பனாரைப் படிக்கின்ற காலத்திலிருந்தே நான் அறிவேன். படிப்பைப் பாதியிலேயே விட்டு விடக்கூடிய சூழல்கூட அவருக்கு வந்தது. அந்நிலையிலும் தளராது படித்து கல்லூரிப் படியேறி இன்று பேராசிரியராய், பதிப்பாசிரியராய் புகழேணியில் பவனி வருகிறார்.

— வீர. சிவராமன் (செல்வி பதிப்பகம்)

எழுத்தாளர் என்றால் 'வளமை' என்கிறது மேல் நாடு; எழுத்தாளர் என்றால் 'வறுமை' என்கிறது நம் நாடு. இந்நாட்டில் ச. மெய்யப்பனார் மேனாட்டு எழுத்தாளர் ஆவார்.

— அய்க்கண்

வழிகாட்டி என்றால் எனக்குப் பிடிக்காது. ஆனால் வெற்றி வழிகாட்டி பாடநூல் போலவே அமைந்திருப்பதால் அதனை நான் வரவேற்கிறேன்.

— சுப. சீனிவாசன்

தஞ்சாவூர் நெற்களஞ்சியம்; மேலைச்சிவபுரி தமிழ்க் களஞ்சியம்.

உழைப்பது, உயர்வது என்பதை ஒரு இலட்சியமாகக் கொண்டு அதனை நாளும் கடைப்பிடிப்பதிலே எனக்கு பெரு விருப்பம் உண்டு. அதனையே வாழ்வின் நியதியாகவும் கருதுகின்றேன்.

நல்ல நூல்களைப் போல நல்ல நண்பர்களைக் காண்பதிலே நான் எப்போதும் மகிழ்ச்சி கொள்பவன்

நான் இன்றும் மாமனார் மெச்சும் மாப்பிள்ளை. அவர்கள் என் வாழ்வின் வழிகாட்டி, நெறியாளர், நல்ல நண்பர்.

— பேராசிரியர் ச. மெய்யப்பன்

நானும் என் மாப்பிள்ளை ச. மெய்யப்பனும் மாமனார் - மாப்பிள்ளை என்ற உறவில் பழகுவதில்லை. அண்ணன் - தம்பி போலவே பழகுகிறோம். ஒருவொருக்கொருவர் மனம் விட்டுப் பேசுகிறோம்.

— விகடம் காசிச் செட்டியார்.

(மேலைச்சிவபுரியில் 15-4-90 அன்று நடைபெற்ற வள்ளுவர் மன்ற 34 ஆம் ஆண்டு விழா & திரு. ச. மெய்யப்பனாரின் பாராட்டு விழாவில் பேசியவை.)

சர்வதேச பாபாஜி யோக சங்கம்

கானாடுகாத்தானில் சர்வதேசப் பாபாஜி யோக சங்கத்தைத் தோற்றுவித்து உலகத்தின் பல நாடுகளில் கிளைகளை அமைத்துள்ள யோகி இராமையா செட்டியாரின் யோக மருத்துவ சேவை உலகெங்கும் பாராட்டப் படுகிறது. மேற்படி சங்கத்தின் 37 ஆவது சர்வதேசமாநாடு நேமத்தான்பட்டி அருகில் உள்ள ஆதனூர் அரங்கில் 14-1-90 & 15-1-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான வெளிநாட்டு அன்பர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். 15-1-90 மாலை காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் பாதயாத்திரை அனுபவங்கள் பற்றி உரையாற்றினார்.

திருமணம்

அலவாக்கோட்டை நாக. நாகப்ப செட்டியார் அவர்கள் (முன்னாள் கோவை நகரத்தார் சங்கத் தலைவர்) புதல்வன் செல்வன் செந்தில்நாதன் B.A. க்கும் அலவாக்கோட்டை சுப. சித. ராம. சுப. ஜெகன்னாதன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வெண்ணிலா B. Com. Dip. B. L. க்கும் அலவாக்கோட்டையில் 15-3-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

கண்டரமாணிக்கம் பள்ளி ஆண்டு விழா

கண்டரமாணிக்கம் ஸ்ரீ தண்டாயுதபாணி உயர்நிலைப் பள்ளியின் 38ஆவது ஆண்டு நிறைவு விழா 20-3-90 அன்று மாலை அருள்நெறிச்செல்வர் திரு. ராம. சி. சின்னான் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. சத்தானகிருஷ்ணன் வரவேற்றார். புலவர்மாமணி திரு. மா. முத்துராமன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது;

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா படத் திறப்பு விழா

இராயவரம் சு. கதி. காந்தி உயர்நிலைப் பள்ளியின் இலக்கிய மன்ற ஆண்டு விழாவும், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் படத் திறப்பு விழாவும் 5-3-90 அன்று நடைபெற்றது. விழாவிற்கு திரு. எஸ்பி. காசிச் செட்டியார் தலைமை தாங்கினார். தமிழாசிரியர் திரு. அரங்க நெடுமாறன் வரவேற்றார். தலைமை ஆசிரியர் திரு. எம். பெரிச்சியப்பன் அறிக்கை வாசித்தார். அழ. வள்ளியப்பா படத்தை அவரது மாப்பிள்ளை திரு அருணாசலம் திறந்து வைத்துப் பேசினார். புலவர் மாமணி மா. முத்துராமன் இலக்கியப் பேருரையாற்றினார். புலவர் மாமணி தனது பேச்சில் ''கடியாபட்டி பள்ளியில் 'தவத்திரு அடிகளார் படித்த பெருமைக்குரிய பள்ளி'' என்றும், மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் 'பாரதியார் தமிழ்ப் பணியாற்றிய பெருமைக்குரிய பள்ளி' என்றும் எழுதப்பட்டுள்ளது. அதே போல் குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா படித்த இந்த சு கதி. காந்தி உயர்நிலைப் பள்ளியில் ''அழ வள்ளியப்பா படித்த பள்ளி'' என்று எழுதி வைக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார். ''சந்தர்ப்பம் வரும்போது அதனை நிறைவேற்ற முயல்வோம்'' என நிர்வாகத்தின் சார்பாக திரு. அரங்க நெடுமாறன் நன்றியுரையில் குறிப்பிட்டார்.

''நகரத்தார் குரல்'' ஏப்ரல்' 90 இதழில் முனைவர் தமிழண்ணல் அவர்கள் நம்மவர்களின் திருமணங்களில் எச்சில் இலைகளில் வீணாகும் பொருள்களைப் பற்றி மிகச் சிறப்பாக எழுதியிருந்தார்கள். அதைப் படித்ததும் மனத்துள் எழுந்த எண்ணங்கள் கவிதையாக உருப்பெற்றது. அக் கவிதை இதோ :-

இட்டிலி போதும்; துணையாய்க் காரச் சட்டினி போதும்!

மச்சினை, மனையை, வாழும்
மாளிகை தன்னை விற்று
பச்சடி, அவியல் எண்ணெய்ப்
பலகார வகைக ளாக்கி,
துச்சமாய் இலையில் வீசித்
தொடர்ந்து நாம் எறிந்தால் நாளை
நிச்சயம் நகரத் தார்கள்
நிலைமைகீழ் ஆகும் அன்றோ?

ஐந்துபெண் பெற்றால் ஆளும்
அரசனும் ஆண்டி யென்பார்!
ஐந்தல இன்று ஒன்றே
அரைத்துணிக் கலைய வைக்கும்
நைந்திடு நிலையில், மேலும்
நசித்திடச் செய்யும் இந்த
விந்தைசேர் இயல்பை நம்மோர்
விலக்கினால் உயர்வோம் கண்டீர்

எண்ணெய்யின் விலையோ ஓங்கி
இமயமாய் உயரும் இன்னாள்
பண்ணிய பலகா ரங்கள்
பாழ்பட இலையில் வீசின்
திண்ணமாய் நமது வாழ்வு
சிதறிடும்! இனிமே லேனும்
கண்ணிய நகரத் தார்கள்
காலத்தை ஒட்டி வாழ்வோம்!

இட்டிலி போதும்! அதை
யேற்றிடத் துணையாய்க் காரச்
சட்டினி ஒன்றே போதும்!
சமையலில் கறிகாய் கூட்டு
திட்டமாய் ஒன்றி ரண்டே
செய்வது போதும் என்று
கட்டளை யிட்டே நாமும்
காலத்தை ஒட்டி வாழ்வோம்

— காரைக்குடி மு. நா. நாராயணன்
கண்டிக்கொப்பா

செட்டிநாட்டரசர்: சில செய்திகள்

❀ செட்டி நாட்டரசர் ராஜாசர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்களின் பிறந்த நாள் 5-8-1905; இயற்கை எய்திய நாள் 12-5-1984

❀ இவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றவர்கள். இவர்களது புதல்வர்கள் குமாரராஜா மு. அ. மு. முத்தையா செட்டியார், மு. அ. மு. இராமசாமிச் செட்டியார், மருமகள்கள் திருமதி மீனாள் முத்தையா, திருமதி செகப்பி இராமசாமி ஆகியோரும் பி. ஏ. பட்டம் பெற்றவர்கள்.



❀ ராஜாசர் முத்தையாச் செட்டியார் அவர்கள் 1929 முதல் 1935 வரை சென்னை மாநகராட்சியில் உறுப்பினராகவும் 1932-33, 1933-34 ஆகிய இரு ஆண்டுகள் சென்னை நகரத் தந்தை (மேயர்)யாகவும் சேவை செய்திருக்கிறார்கள்.

❀ இவர்கள் 1936-37ல் சென்னை மாநிலக் கல்வி சுகாதார அமைச்சராகவும் 1937-39ல் சென்னைச் சட்ட மன்றத்தில் ராஜாஜி அவர்கள் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் சேவை செய்திருக்கிறார்கள்.

❀ 1930 முதல் 1961 வரை-31 ஆண்டுகள் தொடர்ந்து சென்னைச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த பெருமைக்குரியவர்கள் இவர்கள்.

❀ 1928 முதல் 1932 வரை சென்னை இந்தியன் வங்கியில் இயக்குநராகவும் 1932 முதல் 1956 வரை இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவில் இயக்குநராகவும் 1964 முதல் 1969 வரை சென்னை இந்தியன் வங்கியில் தலைவராகவும் இருந்து வங்கிகளின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியிருக்கிறார்கள்.

❀ ஆங்கில அரசின் ராஜா, சர் பட்டங்களையும் மத்திய அரசின் பத்மபூஷன் விருதையும் தமிழக அரசின் தமிழிசைக் காவலர் பட்டத்தையும் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளித்த டாக்டர் பட்டங்களையும் பெற்றவர்கள் நம் செட்டி நாட்டரசர் அவர்கள்.

❀ பல நற்பணிகள் ஆற்றியவரும் தமிழிசை தழைத்தோங்கப் பாடுபட்டவருமான ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் நினைவாக மத்திய அரசின் அஞ்சல்- தந்தித் துறை 21-12-87 அன்று சென்னையில் அவர்களது உருவம் பொறித்த 60 காசு சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டது.

❀ "தமது இறுதி மூச்சு உள்ள வரையில் இந்தியை எதிர்த்த அவர்களது மொழிப் பற்று நினைத்து நினைத்துப் போற்றத் தக்கதாகும்" என தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் புகழாரம் சூட்டினார்கள்.

— "எல்லெஸ்"

கோபியும் கண்ணனும்...

ஆயர்பாடியில் யசோதை புதல்வனாய் வளர்கின்ற கண்ணன் தன் பெரியப்பா நந்தகோபனைப் பார்த்து ,'பெரியப்பா! பெரியப்பா நீங்கள் ஜோதிடத்தில் வல்லவராயிற்றே! நான் திருடச் செல்வதற்கு ஒரு நல்ல நாள்ப் பார்த்துச் சொல்லுங்களேன்'' என்றான்.

''என்ன திருடுவதற்கு நாள்ப் பார்த்துச் சொல்லவா?'' என்று அவர் ஆச்சரியமாகக் கேட்டார்.

''ஆமாம் பெரியப்பா, வெண்ணெய் திருட.. அது எனக்காக மட்டுமல்ல். என் நண்பர்கட்குக் கொடுக்க'' என்றான்.

அவரும் அது போல் ஒரு நல்ல நாள்ப் பார்த்துச் சொன்னார் அந்த நாளில் கண்ணன் கோபிகாஸ்திரி வீடொன்றுக்கு வெண்ணெய் திருடச் சென்றான்.

அவ்வீட்டில் கோபி தங்கத்தால் ஆன பெரிய பானையில் சோறு சமைத்துக் கொண்டிருந்தாள். அங்கும் இங்கும் அந்த வீட்டில் சுற்றிய கண்ணன் வெண்ணெய் திருடாமலே வெளியில் வருவதற்கு எத்தனிக்கிறான். அதுவரை பேசாது இருந்த அந்த கோபி ''கண்ணா ஒன்றுமே கொள்ளாமல் செல்கிறாயே! ஏன்?'' என்று கேட்டாள்.

உடனே கண்ணன் ''நான் வந்ததும் உன்னை கோபி என்றேன்; சிநேகிதி என்றேன்; இனியவளே என்றேன்; என்னென்னமோ அன்பு வார்த்தைகள் சொல்லி அழைத்தேன். நீ பேசவே இல்லை. இருந்தும் இல்லாதவள் போல் நடந்து கொண்டாய். ஆள் இல்லாத வீட்டில் திருடும் கொள்கை எனக்கு இல்லை. ஆதலால் திரும்பி விட்டேன்'' என்றான்.

''கண்ணா வந்ததும் உன்னைப் பார்த்துவிட்டேன். நீ பேசியது எல்லாம் கேட்டது ஆயினும் நான் பேசவில்லை. ஏன் தெரியுமா? நீ இங்கும் அங்கும் சுற்றும் அழகு தங்கப் பானையில் ஒளிவிட்டு மின்னிக் கொண்டே இருந்தது, அந்த அழகைப் பார்த்துப் பார்த்து ரசிக்க நினைத்த நான், எங்கே நீ சென்றுவிட்டால் காணாது போய் விடுமோ என்ற ஏக்கத்தில் பேசாமல் இருந்தேன்'' என்றாளாம் அந்தக் கோபி

(புலவர்மாமணி திரு மா. முத்துராமனின் பேச்சிலிருந்து)

— ஆ. மு: கல்யாணி
புதுக்கோட்டை

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணாபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் வி. என். சிதம்பரம்

நகரத்தார் குரல்

விளம்பர விவரம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ.	500-00
அட்டை (உள் பக்கம்)	ரூ.	300-00
முழுப் பக்கம்	ரூ.	150-00
அரைப் பக்கம்	ரூ.	75-00
கால்ப் பக்கம்	ரூ.	40-00

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் பாதிக் கட்டணத்தில் வெளியிடப்பெறும்.

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணி விழா, திருமணச் செய்திகள் ஒளிப்படத்துடன் வெளியிட (அரைப் பக்கம்) கட்டணம் ரூ 50-00

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	ரூ.	24-00
டெபாசிட் சந்தா	ரூ.	200-00

ஓர் ஆண்டுக்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சந்தாத் தொகையை MO மூலமும் பாங்க் டிராப்ட்மூலமும் அனுப்புபவர்கள் முழு முகவரியுடன் சென்ற ஆண்டு தொகை செலுத்தியதற்கான இரசீதின் எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்; அல்லது எந்த மாதம் முதல், இதழ் வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு :

"நகரத்தார் குரல்"

25, வடக்குச் சித்திரை வீதி,

மதுரை-625 001

Regd. No. TN/MA/(C)/106 NAGARATHAR KURAL